


ஜமாலியன் டைம்ஸ்
Since 1951
Show Us The Right Path
தமிழ் மாத இதழ்
இதழ் 7 சுற்று 9 | JAMALIAN TIMES | ஜனவரி, 2024




# ஜமால் முகமது கல்லூரியில் 75வது குடியரசு தின விழா கொண்டாட்டம்














திருச்சி, ஜன. 26 – ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜாநஜீமுதீன் அவர்கள் தேசியக்கொடியேற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். கல்லூரி முதல்வர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் அவர்கள் குடியரசு தின உரையாற்றினார். தேசிய அளவிலான முகாம்களில் கல்லூரி சார்பில் பங்கேற்ற 17 தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு கல்லூரி நிர்வாகம் சார்பில் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டப்பட்டது. கல்லூரியின் தேசிய மாணவர் படை அலுவலர் (காலாட் படை) மேஜர் எப்.எஸ்.முஜமில் நிகழ்ச்சியை வழிநடத்தினார். பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றுவிருதுகள், சான்றிதழ்கள் பெற்றவர்கள் பாராட்டப்பட்டனர். கல்லூரியின் பொருளாளர் எம்.ஜே.ஜமால் முஹம்மது, உதவிச்செயலாளர் கே.அப்துஸ்சமது. கல்லூரி ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் மற்றும் கவுரவ இயக்குனர் கே.என்.அப்துல்காதர் நிஹால், கல்லூரியின் துணை முதல்வர் ஜார்ஜ் அமலரெத்தினம் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.




## NATIONAL LEVEL REPUBLIC DAY PARADE -NEW DELHI







Ms. S.Thirisha and Mr. R. Perumal Samy two NSS Volunteers of Jamal Mohamed College made their college proud by their selection for the national level Republic Day Parade at Kartavya path, New Delhi and state level Republic Day Parade, Marina Chennai respectively on 26-01-2024

நமது ஜமால் முகமது கல்லூரியில்

# வேலைவாய்ப்பு சிற்றேடு வெளியிடும் நிகழ்ச்சி




திருச்சி, ஜன.21– ஜமால் மேலாண்மை நிறுவனம், ஜமால் முகமது கல்லூரியின் (தன்னாட்சி) வேலைவாய்ப்பு சிற்றேடு வெளியிடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கல்லூரியின் துணை முதல்வர் மற்றும் கல்லூரி நிர்வாகத்தினர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பேராசிரியர் சிவநேசன் வரவேற்புரையாற்றினார். தொடர்ந்து நிறுவனத்தின் வேலைவாய்ப்பு அலுவலர் முத்துராஜா கண்ணன் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து நிறுவனத்தின் வேலைவாய்ப்பு நடவடிக்கைகள் பற்றி எடுத்துரைத்தார்.

சிறப்பு விருந்தினர் சென்னை அசோக் லேலண்ட் நிறுவனத்தின் மனிதவள மேலாண்மை துறைத் தலைவர் சசிகுமார் வேலைவாய்ப்பு சிற்றேட்டை வெளியிட அதனை கல்லூரியின் தாளாளர் பெற்றுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் சசிகுமார் பேசும் போது, ஒரு மாணவர் வாழ்க்கையை எவ்வாறு திட்டமிட வேண்டும், அதே போல் தோல்விகளை எவ்வாறு எதிர்கொள்வது மற்றும் அவற்றை எவ்வாறு நிதானத்துடன் கையாள்வது என்பது பற்றி தனது வாழ்வியல் எடுத்துக்கட்டுடன் எடுத்துரைத்தார்.

நிகழ்வில் திருச்சியை சார்ந்த முன்னணி நிறுவனங்களின் மனிதவள துறை மேலாளர்கள் மற்றும் இயக்குனர்கள் பங்கேற்று மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.




நமது ஜமால் முகமது கல்லூரியில் நவீன தொழில்நுட்ப கருவிகள் மூலம் அரபு மொழி தொடர்புத் திறன்களை மேம்படுத்த

# ஒரு நாள் தேசிய பயிலரங்கம்



திருச்சி, ஜன. 24– திருச்சி ஜமால் முகமது கல்லூரி முதுகலை மற்றும் அரபு ஆய்வுத் துறை சார்பில் 'நவீன தொழில்நுட்ப கருவிகள் மூலம் அரபு மொழி தொடர்புத் திறன்களை மேம்படுத்துதல்' தலைப்பில் ஒரு நாள் தேசிய பயிலரங்கம் 23.1.2024 அன்று காலை 10 மணிக்கு செய்யது ஹூசைனுதீன் அரங்கில் நடைபெற்றது. கல்லூரி துணை முதல்வர் ஜார்ஜ் அமலரெத்தினம் தலைமையுரை நிகழ்த்தினார். அரபுத் துறைத் தலைவர் முகம்மது இஸ்மாயில் வரவேற்றார்.

சென்னை புதுக் கல்லூரி முன்னாள் முதல்வரும் அரபுத் துறைத் தலைவருமான அப்துல் மாலிக், தேசிய பயிலரங்கத்தின் தொடக்க உரையை வழங்கினார். கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் காஜா நஜீமுத்தீன் மற்றும் கல்லூரி பொருளாளர் ஜமால் முகமது வாழ்த்துரை வழங்கினர்.

கேரளா கொன்டோட்டி ஈ.எம்.ஈ.ஏ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் அரபுத் துறை உதவிப்பேராசிரியர் உமர் தாய்தோடி மற்றும் சென்னை புதுக் கல்லூரியின் அரபுக் துறை உதவிப்பேராசிரியர் தமீம் அன்சாரி ஆகியோர் தேசிய பயிலரங்கத்தை தேசிய பயிலரங்கத்தின் நிறைவு விழா மாலை 5 மணிக்கு நடைபெற்றது. அரபுத்துறை பேராசிரியர் அஹமது சாகுல் அமீது வரவேற்றார். நிறைவுரையை கேரளா கொன்டோட்டி ஈ.எம்.ஈ.ஏ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் அரபுத் துறை துணை பேராசிரியர் உமர் தாய்தோடி நிகழ்த்தினார். இவ்விழாவிற்கு கல்லூரி துணை முதல்வர் ஜார்ஜ் அமலரெத்தினம் தலைமை தாங்கினார். அரபுத் துறை பேராசிரியர் செய்யது அகமது நெய்னா நன்றியுரை நிகழ்த்தினார்.

கணினி, அலைபேசி வழியாக மென்பொருள் திறனை கற்று மொழிபெயர்ப்பு சார்ந்த அறிவுகளை மேம்படுத்துவது, போட்டித் தேர்வுகளிலும் நேர்முகத் தேர்வுகளிலும் மாணவர்கள் தங்கள் நிலையை உயர்த்த முயற்சிகள் மேற்கொள்வது இப்பயிலரங்கின் நோக்கமாகும்.




# 38TH CONVOCATION – BHARATHIDASAN UNIVERSITY



38th Convocation held at the Bharathidasan University on 02.01.2024. I am also happy to state that a total of Thirty Nine students of our college had secured University Ranks for the year 2022-23.
- Principal



The PG & Research Department of Computer Science of Jamal Mohamed College organized an Intra-Collegiate Competition "FESToCS 2024" on 23rd January 2024.




Department of Chemistry (SF- Women ) of Jamal Mohamed College (Autonomous), Tiruchirappalli ,Organized National Level Intercollegiate Extravaganza (Chem-Fiesta 2024) on 23rd January 2024.



ஜமால் முகமது கல்லூரி – முதுகலைத் தமிழாய்வுத்துறை சிற்பி பாலசுப்ரமணியன் அறக்கட்டளைச் சொற்பொழிவு – செய்தி அறிக்கை – 31.01.2024



National Voters Day Awareness Programme 2024



Thanneer Sutru Choolal Maanavar Mandram of Jamal Mohamed College, Tiruchirappalli organized a Special Lecture Program to enrich Leadership Qualities for the Office Bearers of the Clubs on the topic "Let us Become Successful Leaders" on 09thJanuary 2023, Tuesday at 11.45 a.m.

ஜமாலியன் டைம்ஸ்
தமிழ் மாத இதழ்

ஆசிரியர்
முனைவர். எஸ். இஸ்மாயில் முகைதீன்
M.Sc., M.Phil., PGDCA., Ph.D.,
கல்லூரி முதல்வர்

செய்தி ஆசிரியர்
K. சண்முக வேலாயுதம்
M.A., M.Phil.,SET.,
துறைத் தலைவர் (காட்சித் தொடர்பியல் துறை)

இணை ஆசிரியர்கள்
D. பிரதீபன் M.Sc., SET.,
R. ராஜேஷ்குமார் M.A., M.Phil.

ஆசிரியர் குழு
உதவிப் பேராசிரியர்கள், காட்சித் தொடர்பியல் துறை
B. ராமகிருஷ்ணன் M.F.A.,M.Phil.,
முனைவர் S. ரகுநாதன் M.A., PGDAPR., MA., Ph.D.,
G. பரணீதரன் M.Sc.,
H. முஹம்மத் பயாஸ் M.Sc.,

மாணவர்கள், காட்சித் தொடர்பியல் துறை
T.M. கரண், R. வெற்றி கண்ணன்,

நிருபர்கள்
M. பாண்டியன், S. சுஜித்குமார் ,
R. அஸ்வந்த் கணேஷ் R.தீபக்குமார்

ஒளிப்படக் கலைஞர்கள்
K. அரவிந்த் குமார், A. வசந்த பிரியன்,
R.பாலசுப்ரமணியன், A. ரியாஸ்

தொடர்புக்கு
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 620 020

காட்சித் தொடர்பியல் துறையின் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக வெளியிடப்படும் ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் தொடர்ந்து வெளிவர தங்களின் கருத்துக்கள், படைப்புகள், மற்றும் துறை செய்திகளை எங்களுக்கு அனுப்பவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
துறைத்தலைவர்
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 620 020
jmcviscom@gmail.com

மாணவர்களின் பயிற்சிக்காக வெளியிடப்படும் இந்த இதழில் வரும் கருத்துக்கள் அனைத்தும் துறையின் கருத்தல்ல.

'ஜமாலியன் டைம்ஸ்' மாத இதழுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் மக்கள் குரலுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் பப்ளிகேஷன்ஸ் சார்பாக அச்சிடுவோர்
மக்கள் குரல் நடுநிலை நாளேடு TRINITY MIRROR

**துறைத் தலைவர்கள் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு ஒரு வேண்டுகோள்**

ஜமாலியன் டைம்ஸ் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது உங்கள் கருத்துக்களை தமிழில் எழுதி கடிதம் மூலமாகவோ அல்லது ஈமெயில் மூலமாகவோ அனுப்பலாம். அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர்,
ஜமாலியன் டைம்ஸ்,
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி – 620020
jmcviscom@gmail.com

நமது ஜமால் முகமது கல்லூரியில் இயற்பியல் துறையின்

# பன்னாட்டு கருத்தரங்கம்




திருச்சி, ஜன.8– ஜமால் முகமது கல்லூரி இயற்பியல் துறையில் பன்னாட்டு கருத்தரங்கம் திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரி, இயற்பியல் துறை. இந்திய நிறமாலை இயற்பியல் கழகத்துடன் இணைந்து 'பொருளறி வியலின் அண்மைப் போக்கு' என்ற தலைப்பில்பன்னாட்டு கருத்தரங்கை நடத்தியது.

சென்னை கல்லூரிக் கல்வி முன்னாள் இணை இயக்குநர் பேராசிரியர் என். கருணாநிதி கலந்து கொண்டு தொடக்கவு ரையாற்றினார். சென்னை, செயின்ட் பீட்டர்ஸ் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவ னத்தின் புல முதன்மையர் மற்றும் இந்திய நிறமாலை இயற்பியல் கழகத்தின் நிறுவன தலைவர் பேராசிரியர் எஸ். குணசேகரன், சென்னை பல்கலைக்கழகம், படிகவியல் மற்றும் உயிர் இயற்பியல் துறையின் தகைசால் பேராசிரியர் எம். என். பொன்னுசாமி, சிங்கப்பூர், ஏ.சி.இ. இன்டர்நேஷனல் லிமிடெட் நிர்வாக நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் பி. ராமநாதன், தர்மபுரி, பெரியார் பல்கலை முதுகலை மற்றும் ஆராய்ச்சி ஆய்வு மையத்தின், இயற்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் எம். செல்வபாண்டியன், திருவாரூர், தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகம், பொருள் அறிவியல் துறை இணைப் பேராசிரியர் எஸ். பீர் முகமது, மும்பை, மூத்த கல்வி பயிற்றுவிப்பாளர் பி. ஜனனி ஆகியோர் கருத்தரங்கத்தில் கலந்து கொண்டு பேசினார்கள்.

நிகழ்ச்சியில், சென்னை கல்லூரிக் கல்வியின் முன்னாள் இணை இயக்குநர் பேராசிரியர் என். கருணாநிதி, சென்னை செயின்ட பீட்டர்ஸ் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் திட்டமிடல் மேம்பாடு மற்றும் அங்கீகாரம் ஆகியவற்றின் புல முதன்மையர் பேராசிரியர் எம். பழனிசாமி ஆகிய இருவருக்கும் இந்திய நிறமாலையியற்பியல் – கழகத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டது.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம், நானோ – அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவிப் பேராசிரியர் ராமலிங்கத்துக்கு ஆராய்ச்சித் துறையில் சிறந்த பங்களிப்புக்காக இந்திய நிறமாலையியற்பியல் கழகத்தின் அறிவியல் முது முனைவர் சேது. குணசேகரன் விருது வழங்கப்பட்டது.

இதில் ஓமன் மற்றும் சீனா போன்ற உலக நாடுகளிலிருந்தும், ஆந்திரா, கர்நாடகா, குஜராத் மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு கல்வி நிறுவனங்களில் இருந்து சுமார் 200 க்கும் மேற்பட்ட முதுகலை, இளங்கலை மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் தங்களது ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்தனர். கல்லூரி கூடுதல் துணை முதல்வர் அ. இஸாக் அஹமது நன்றி கூறினார். முன்னதாக, கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமை உரையாற்றினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முகமது சலீம் கருத்தரங்கிற்கான அறிக்கையை வழங்கினார். கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே.காஜா நஜீமுதீன் கல்லூரியின் பொருளாளர் ஹாஜி. எம்.ஜெ. ஜமால் முகமது ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரியின் துணை செயலர் கே. அப்துஸ் சமது, கல்லூரியின் நிர்வாக உறுப்பினர் மற்றும் கவுரவ இயக்குநர் கே.என். அப்துல் காதர் நிஹால் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரி துணை முதல்வர் ஜார்ஜ் அமலரெத்தினம் நிறைவு விழாவில் தலைமை உரையாற்றினார். இயற்பியல் துறை இணை பேராசிரியர் பீர் முகமது சாதிக் வரவேற்றார். நாகர்கோவில், எஸ்.டி. இந்துக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் பேராசிரியர் த. சிதம்பரதாணு நிறைவு உரையாற்றினார். சுமார் 350 க்கும் மேற்பட்டோர் கருத்தரங்கில் பங்கேற்றனர். இயற்பியல் துறைத் தலைவர் மற்றும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முகமது சலீம் நன்றி கூறினார்.




# STAFF ASSOCIATION – GUEST LECTURE




Staff Association of Jamal Mohamed College and Centre for Human Excellence of Jamal Mohamed College jointly organized a Guest lecture programme on "Value based Education- Need of the hour" on 6th January 2024.

14வது தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு

# மாவட்ட கலெக்டர் முன்னிலையில் மாணவர்கள் உறுதிமொழி



திருச்சி ஜமால்முகமது கல்லூரியில் 14வது தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு வாக்களிப்பதன் அவசியம் குறித்து மாவட்ட கலெக்டர் பிரதீப்குமார் தலைமையில் மாணவர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

தமிழாய்வுத் துறை (தன்னிதி ஆண்கள் பிரிவு) மாணவர் படைப்பரங்கச் சொல்லரங்கம்

# தேசிய இளைஞர் தின விழா – சிறப்புச் சொற்பொழிவு




ஜமால் முகமது கல்லூரி தமிழாய்வுத் துறையில் (தன்னிதி ஆண்கள் பிரிவு) மாணவர் படைப்பரங்கத்தின் சார்பாக சொல்லரங்கம் நிகழ்வும் தேசிய இளைஞர் தின விழா சிறப்புச் சொற்பொழிவும் 12–01–2024 வெள்ளிக் கிழமை அன்று காலை 10:30 மணி அளவில் தகவல் தொழில் நுட்பவியல் குளிர்மை அரங்கில் நடைபெற்றன. நிகழ்வின் தொடக்கமாக தமிழ்த்துறை தன்னிதி ஆண்கள் பிரிவின் பொறுப்பாளர் முனைவர் க.இக்பால் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். ஜமால் முகமது கல்லூரி தமிழாய்வுத் துறையின் இணைப்பேராசிரியர் முனைவர் வ. முகம்மது யூனுஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கவிஞர் பெ. செல்வம் பெரியசாமி அவர்கள் கவிதை எழுதும் வழிமுறைகளையும் சமூக நடப்பியல் சார்ந்த அக்கரையையும் வேளிப்படுத்தினார். இளந்தமிழில்க்கியம் பயிலும் பதினைந்து மாணவர்கள் பல்வேறு தலைப்பில் தத்தம் சொல்லாற்றல் திறனைப் பதிவு செய்தனர். ஜமால் முகமது கல்லூரி தமிழாய்வுத் துறை இணைப்பேராசிரியர் முனைவர் எஸ். நாகூர்கனி அவர்கள் 'நேர்பட பேசு' என்ற தலைப்பில் தேசிய இளைஞர் தின விழா சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார். அவ்வுரையில் இளைஞர் தினத்தின் தேவை, விவேகானந்தரின் வாழ்வும் சொல்லும், இன்றைய இளையோரின் இன்றைய நிலை, இளையோர் நாட்டிற்கும் வீட்டிற்கும் செய்ய வேண்டிய பணிகள் மற்றும் தேவைகள் ஆகிய்வற்றை எடுத்துக் கூறினார். பதினைந்து மாணவர்கள் சொல்லரங்கில் சொல்லாற்பாங்கினை எடுத்துரைத்தார். கையாண்ட படைப்பரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ.மா.முகமது ஹாரிஸ் அவர்கள் நிகழ்வை ஒருங்கிணைத்ததுடன் நன்றியுரையை வழங்கினர். படைப்பரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் செ சுகவனேஸ்வரன் அவர்கள் நிகழ்வை ஒருங்கிணைத்ததுடன் நிகழ்ச்சித் தொகுப்பினையும் வழங்கினர்.

ஜமால் முகமது கல்லூரி இயற்பியல் துறை

# முன்னாள் மாணவர்கள் சந்திப்பு




திருச்சி,ஜன7– திருச்சி ஜமால் முகமது கல்லூரி இயற்பியல் முதுநிலை மற்றும் ஆராய்ச்சித்துறையில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு 03–01–2024 அன்று நடைபெற்றது. 1979–1981 ஆம் ஆண்டு இயற்பியல் முதுகலை முன்னாள் மாணவர்கள் நீண்ட காலத்திற்குப் பிறகு தங்கள் குடும்பங்களுடன் ஒன்று கூடினர். தாங்கள் படித்த இக்கல்லூரிக்கு ஒரு லட்சம் ரூபாயை நன்கொடையாக வழங்கினர். முன்னாள் இயற்பியல் துறை பேராசிரியர்கள் ஆர். ரங்கநாதன், ஆர்.வி.ரங்கநாதன், கமாலுதீன், ஏ. உமர் பாஷா, முகமது ஹுசைன் ஆகியோர் முன்னிலையில் இக்கல்லூரியில் பயின்ற பொழுது உள்ள பழைய அனுபவங்களை நினைவு கூர்ந்தனர்.

இயற்பியல் துறை முன்னாள் மாணவர்களின்ஒருவரான அப்துல் ஜப்பார் இயற்பியல் துறை முன்னாள் மாணவர்களை அறிமுகப் படுத்தினார். முன்னதாக, இயற்பியல் துறைத்தலைவர் முனைவர் ஏ. முகமது சலீம் வரவேற்புரை நிகழ்த்தினார். கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் டி.ஐ. ஜார்ஜ் அமலரெத்தினம் தலைமை உரையாற்றினார். இந்நிகழ்வில், கல்லூரியின் பொருளாளர் ஹாஜி எம்.ஜே. ஜமால் முகமது மற்றும் கல்லூரியின் உதவிச் செயலாளர் கே.அப்துஸ் சமத் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பினர். இறுதியாக, இயற்பியல் துறை முன்னாள் மாணவர் எஸ்ராமச்சந்திரன் நன்றியுரை ஆற்றினார்.



கணினி பயன்பாடுகள், கணினி அறிவியல்,
தகவல் தொழில்நுட்ப துறைகள் இணைந்து நடத்திய

# தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கம்









திருச்சி, ஜன,14 ஜமால் முகமது கல்லூரியின் கணினி பயன்பாடுகள் மற்றும் கணினி அறிவியல் தகவல் தொழில்நுட்ப துறைகள் இணைந்து தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கத்தை 2024, ஜனவரி 11ம் தேதி அன்று நடத்தியது.

ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் மாணவர், பப்புவா நியூகிணியாவில் உள்ள மேற்கத்திய பசுபிக் பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப துறையைச் சார்ந்த ஜே ஷேக்தாவூத் அன்சாரி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தொடக்கவிழா உரையை நிகழ்த்தினார். பிறநாடுகளில் கல்வி முறையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த அவர் பல்வேறு தகவல் தொழில் நுட்பத் துறைகளில் வேலை வாய்ப்புகளைப் பெற மாணவர்களுக்கு உதவி குறிப்புகள் வழங்கினார்.

முன்னதாக, கணினி பயன்பாட்டு துறையின் பொறுப்பாளர் எம். கமால் அனைவரையும் வரவேற்றார். முதல்வர் டாக்டர் எஸ் இஸ்மாயில் முகைதீன் தலைமை உரை நிகழ்த்தினார். பொருளாளர் ஹாஜி எம். ஜே. ஜமால் முகமது சாஹிப் மற்றும் உதவிச் செயலாளர் டாக்டர் மு.அப்துஸ் சமத் பாராட்டு தெரிவித்தனர். அறிவியல் கணினி பயன்பாட்டு சங்கத்தின் துணைதலைவர் உதவிபேராசிரியர் இமாமுதீன் நன்றி தெரிவித்தார்.

Debugging, Web Designing, Paper Presentation போன்ற தகவல் தொழில்நுட்ப நிகழ்வுகள் மற்றும் Adzap, Word Hunt, Connection போன்ற தொழில்நுட்பம் அல்லாத நிகழ்வுகள் நடத்தப்பட்டன. டாக்டர் சே. முகமது அமானுல்லா எம்.சி.ஏ இணைபேராசிரியர் பிஷப்ஹீபர் கல்லூரி, டாக்டர் ஜி. அரோகியா சாக்யா ஷீலா தலைவர், கணினி அறிவியல் துறை ஹோலி கிராஸ் கல்லூரி, டாக்டர் என். செந்தில்குமார் உதவிபேராசிரியர் கணினி அறிவியல் துறை எஸ்.ஆர்.எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆ.நூருல் சிராஜூதீன் திட்ட மேலாளர் இன்புடக்ளிக் டெக்னாலஜி, சென்னை எ. ஸ்ரீதரன் தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டாளர் எலக்ட்ரானிக் ஸ்பிரைவேட் லிமிடெட் அமெரிக்கா மற்றும் டாக்டர் எம்.சிராஜூதீன் உதவி பேராசிரியர் ஜமால் முகமது கல்லூரி பல்வேறு நிகழ்வுகளுக்கு தலைமை விருந்தினராக செயல்பட்டார்கள்.

ஜமால் கல்லூரியின் முகமது செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் பு.லு காஜா நஜிமுதீன் நிறைவு விழா உரையை நிகழ்த்தி வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். தனது நிறைவுறையில் வெற்றி அல்லது தோல்வியை விட போட்டியில் பங்கேற்பது மிகவும் முக்கியமானது என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்தியதற்காக பேராசிரியர்கள், ஊழியர்கள், மாணவ குழுஉறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டினார். முன்னதாக, கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப துறையின் பொறுப்பாளர் டாக்டர் எஸ்.அப்துல் சலீம் வரவேற்றார் ாபுயுணூவீ2லு24 தலைவர் கே.முகமது பைசல் அறிக்கையை வாசித்தார். கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப சங்கத்தின் துணைத்தலைவர் பேராசிரியர் மொசிபுர் ரஹ்மான் கான் நன்றி தெரிவித்தார்.

23 கலை மற்றும் அறிவியல் பொறியியல் மற்றும் கல்லூரிகள் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த 346 மாணவர்கள் இந்த தேசிய அளவிலான கருத்தரங்கில் பங்கேற்றுள்ளனர். போட்டிகளில் வெற்றிபெற்ற முதலாம் மற்றும் இரண்டாம் இடம்பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளையும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. ஒட்டுமொத்த அனைத்து போட்டிகளிலும் அதிகம் விருது பெற்ற மாணவர்களும் பரிசுகளை பெற்றார்கள்.

பிஷப்ஹீபர் கல்லூரி கணினி அறிவியல் மாணவர் ஊபு.கிருஷ்ணா, ாபுயுணூவீ 2லு24 விருதை பெற்றார். அதே கல்லூரி ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் விருதை பெற்றது.

ஹாஜி எம்.ஜே. ஜமால்முகமது சாஹிப் பொருளாளர், ஜமால் முகமது கல்லூரியின் நிர்வாக உறுப்பினரும் மற்றும் கௌரவ இயக்குனருமான டாக்டர். அப்துல்காதர் – நிஹால் மற்றும் பேராசிரியர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள். டாக்டர் G. ரவி CA, CS, IT ஒருங்கிணைப்பாளர் மற்றும் VARIT2k24 ஒருங்கிணைப்பாளர், கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப துறையின் பொறுப்பாளர் டாக்டர் எஸ்அப்துல் சலீம், கணினி பயன்பாட்டுதுறையின் – பொறுப்பாளர் எம்.கமால், கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப 7 சங்கத்தின் துணைத்தலைவர் உதவிபேராசிரியர் மொசிபுர் – ரஹ்மான் அறிவியல்கான், கணினி பயன்பாட்டு சங்கத்தின் துணைதலைவர் உதவிபேராசிரியர் எல்.இமாம்தீன், மாணவர் ஆலோசகர் கணினி பயன்பாட்டுதுறை உதவி பேராசிரியர் டாக்டர் எஸ்பீர்பாட்ஷா, மாணவர் ஆலோசகர் கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை உதவி பேராசிரியர் டாக்டர் சி. அகிலன், பல்வேறு குழுக்களின் ஊழியர்கள், செனட் உறுப்பினர்கள் அனைத்து பேராசிரியர்கள், மாணவர்கள்மற்றும் அனைவரும் இந்நிகழ்வில் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளனர்.

சகோதரிகளே!
உங்கள் போட்டோக்களை பேஸ்புக்கில் போடவேண்டாம்!
உங்கள் தலைகளை பலியாக்க
பல கும்பல்கள் காத்திருக்கின்றன.




# NATIONAL CONFERENCE




The PG and Research Department of Commerce organized a National conference on the topic “TECHNOLOGICAL ADVANCEMENT AND ITS IMPACT ON ENTREPRENEURSHIP” on 24th January, 2024.

ஆண்கள் நெட்பால் போட்டி

# ஜமால் முகமது கல்லூரி அணி சாம்பியன்








திருச்சி, ஜன.11 – பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளுக்கு இடையிலான ஆண்கள் நெட்பால் போட்டி திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் கடந்த 2 நாட்களாக நடந்தது. இதில் 7 அணிகள் கலந்து கொண்டன. இதன் இறுதிப்போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரியும், திருவாரூர் சுவாமி தயானந்தா கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடந்த இந்தபோட்டியில் ஜமால் முகமது கல்லூரி 40–33 என்ற புள்ளி கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை3–வது முறையாக தொடர்ந்து கைப்பற்றியது. 3–வது இடத்தை தத்தனூர் மீனாட்சி ராமசாமி கல்லூரியும், 4–வது இடத்தை பாரதிதாசன் பல்கலைக்கழக அணியும் பெற்றன. பின்னர் நடந்த பரிசளிப்பு விழாவில் கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் காஜா நஜீமுதீன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு முதல் நான்கு இடங்களை பிடித்த அணிகளுக்கு கோப்பைகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். நிகழ்ச்சியில் பொருளாளர் ஜமால் முகமது, துணை செயலாளர் அப்துஸ் சமத், முதல்வர் இஸ்மாயில் மொகைதீன், துணை முதல்வர் ஜார்ஜ் அமலரத்தினம், உடற்கல்வி இயக்குனர் ஷாயின்ஷா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## STUDENTS' CORNER

# STORY BOARD DRAWING




**A. Asik sarfudeen**
**1ST Year B.Sc Visual Communication**